SBI LIFE- eShield
A PURE TERM INSURANCE PLAN
UIN: 111N089V04

SBI Life INSURANCE
With Us, You're Sure

எஸ்பிஐ லைஃப் - இஷீல்டு என்பது ஒரு தனிப்பட்ட, நான்-லிங்க்டு, நான்-பார்டிசிபேட்டிங் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் ப்யூர் ரிஸ்க் பிரீமியம் திட்டம், இது தொழில்நுட்ப அறிஞர், கல்வியறிவுபெற்றவர், அதிக நிகர மதிப்புமிக்கவர்களுக்காக ப்யூர் பாதுகாப்பு எதிர்பார்க்கும் நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தத் திட்டம் இரண்டு பலன் கட்டமைப்புகளுடன் கிடைக்கிறது, லெவல் கவர், இதில் பாலிசி காலவரை முழுவதும் பாதுகாப்பு தொகை நிலையாக இருக்கிறது மற்றும் இன்க்ரீஸிங் கவர், இதில் பாதுகாப்பு தொகை காலப்போக்கில் அதிகரிக்கிறது. இந்தத் திட்டம் மேலும் ஓர் உள்ளமைந்த பலனாக அக்சிலரெடெட் டெர்மினல் இல்நஸ் பெனிஃபிட் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரைடர்களுக்காக கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம், பாதுகாப்பு வாய்ப்பை அதிகரித்துக்கொள்ள விருப்பத்தேர்வு வழங்குகிறது.

## எஸ்பிஐ லைஃப் - இஷீல்டு திட்டம் ஏன்?

- ஒரு கட்டுபடியாகும் விலையில் உங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு
- ஆயுள் காப்பு பெறுவதற்காக எளிய மற்றும் சிக்கலற்ற ஆன் லைன் செயல்முறை
- லெவல் கவர் மற்றும் இன்க்ரீஸிங் கவர், என்னும் இரண்டு பலன் கட்டமைப்பு, உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பாதுகாப்பு வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பத்தேர்வுக்கு ஏற்ப பிரீமியம் தொகை வேறுபடுகிறது.
- இரண்டு அமைப்புகள் கீழும் ஓர் உள்ளமைந்த பலனாக அக்சிலரேட்டட் டர்மினல் பெனிஃபிட் கிடைக்கிறது.
- நீங்கள் புகைபிடிக்காதவராக இருந்தால், குறைந்த பிரீமியம் உங்களுக்கு வெகுமதியாக அளிக்கப்படுகிறது.
- பின்வரும் ரைடர்கள் மூலம் உங்கள் கவரேஜை அதிகரித்துக் கொள்ள விருப்பத் தேர்வு :
  - எஸ்பிஐ லைஃப் - ஆக்ஸிடென்டல் டெத் பெனிஃபிட் ரைடர் (UIN: 111B015V03)
  - எஸ்பிஐ லைஃப் - ஆக்ஸிடென்டல் டோட்டல் & பர்மனென்ட் டிஸெபிலிட்டி பெனிஃபிட் ரைடர் (UIN: 111B016V03)
- மெடிகைடு இந்தியா வழங்கும் மருத்துவ இரண்டாவது கருத்து அறிந்து பயனடையுங்கள், இது ஆயுள் காப்பீட்டுதாரருக்கு மற்றொரு மருத்துவர் மூலம் தங்களுடைய நோய் கண்டறிதலின் இரண்டாவது கருத்து அறிய மற்றும் சிகிச்சை திட்டங்களை அறிந்து கொள்ள ஏதுவாக்குகிறது.
- வருமான வரிச் சட்டம், 1961 நடப்பு விதிமுறைகளின் கீழ் வரிக் சலுகைகள்*.

*அவ்வப்போது மாற்றமடையக்கூடிய வருமான வரிச் சட்டங்களின் கீழ், கீழ் வரிக் சலுகைகள் அனுமதிக்கப்படும். விபரங்களுக்கு உங்கள் வரி ஆலோசகருடன் கலந்துரையாடவும்.


**கவனிக்கவும்: உறுதியளிக்கப்பட்ட ரைடர் தொகை அடிப்படை உறுதியளிக்கப்பட்ட தொகைக்கு மிகையாக இருக்கவியலாது. லெவல் டெர்ம் அஸ்யூரன்ஸ் மற்றும் இன்கிரீஸிங் டெர்ம் அஸ்யூரன்ஸ் இரு திட்ட ஆப்ஷன்களிலும் ரைடர்கள் கிடைக்கும். இன்கிரீஸிங் டெர்ம் அஸ்யூரன்ஸ் திட்டத்துடன் ரைடர்களைத் தேர்வு செய்தாலும் கூட அவை லெவல் காப்பு உள்ளதாக இருக்கும்.**

## விளக்கம்

திரு. விஜய் 35 வயதானவர் (புகைபிடிக்காதவர்), அவருடைய குடும்பத்திற்காக அவர் மட்டுமே வருவாய் ஈட்டுபவர் ஆதலால் எப்போதும் அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால் அவருடைய குடும்பம் தங்களுடைய நிதிசார் சுதந்திரத்தை இழுந்துவிடுமோ என்று எண்ணி கவலைபட்டுக் கொண்டிருப்பவர். அவர் எஸ்பிஐ லைஃப்-இஷீல்டு வாங்க திட்டமிடுகிறார்.
எஸ்பிஐ லைஃப்-இஷீல்டு அவருடைய குடும்பத்தை நிதிநிலைசார்ந்து எவ்வாறு உதவுகிறது என்பது பற்றி பார்ப்போம்.

**<u>இன்க்ரீஸிங் கவர் பெனிஃபிட் :</u>**

**ஆரம்ப காப்பீட்டுத் தொகை : 50 லட்சம், பாலிசி காலவரை : 30 ஆண்டுகள், வருடாந்திர பிரீமியம் : ரூ.9,350**




அவருடைய துரதிர்ஷ்டவசமான இறப்பு பேரில் அளிக்கத்தக்க காப்பீட்டுத் தொகை, அதாவது 6வது பாலிசி ஆண்டுபோது@ ரூ.55,00,000 ஆக இருக்கும். இருப்பினும், 11வது பாலிசி ஆண்டுபோது@ இறப்பு ஏற்பட்டால் அளிக்கத்தக்க காப்பீட்டுத் தொகை, ரூ.60,00,000 (ரூ.50,00,000 + [2*10%*50,00,000]) ஆக இருக்கும்.

*@நோய் கண்டறியப்பட்டபோது அல்லது இறப்பு தேதி அன்று பாலிசி நடைமுறையில் இருக்கும்பட்சம் பொருந்தும்*

| திட்டம் ஒரு கண்ணோட்டம் | | |
|---|---|---|
| **பலன் கட்டமைப்புகள்** | • காப்பீடு அளவு<br>• அதிகரிக்கும் காப்பீடு | |
| **நுழைவு நிலையில் வயது^** | **குறைந்தபட்சம் :**<br>18 ஆண்டுகள் | **அதிகபட்சம் :**<br>**காப்பீடு அளவு :** 65 ஆண்டுகள்<br>**அதிகரிக்கும் காப்பீடு :** 60 ஆண்டுகள் |
| **முதிர்வு நிலையில் வயது^** | காப்பீடு அளவு பலனிற்காக 80 ஆண்டுகள்<br>அதிகரிக்கும் காப்பீடு பலனிற்காக 75 ஆண்டுகள் | |
| **அடிப்படை காப்பீட்டுத் தொகை (ரூ.1,00,000-ன் மடங்குகளில்)** | **குறைந்தபட்சம் :** ரூ.35,00,000 | **அதிகபட்சம் :** வரம்பு இல்லை<br>(குழு ஒப்புதல் வழங்கியுள்ள காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது) |
| **பிரீமியம் செலுத்தும் வகை** | வருடாந்திரம், அரையாண்டு, காலாண்டு மற்றும் மாதாந்திரம்^^ | |
| **வருடாந்திரமற்ற வகைகளுக்காக பிரீமியம்** | அரையாண்டு : வருடாந்திர பிரீமியத்தின் 51.00%<br>காலாண்டு : வருடாந்திர பிரீமியத்தின் 26.00%<br>மாதாந்திரம் : வருடாந்திர பிரீமியத்தின் 8.50% | |
| **பாலிசி காலவரை** | **குறைந்தபட்சம் :**<br>**காப்பீடு அளவுக்காக :**<br>5 ஆண்டுகள்<br>**அதிகரிக்கும் காப்பீட்டிற்காக :**<br>10 ஆண்டுகள் | **அதிகபட்சம் :**<br>**காப்பீடு அளவுக்காக :**<br>நுழைகையில் 80 ஆண்டுகளுக்கு குறைந்த வயது^<br>**அதிகரிக்கும் காப்பீட்டிற்காக :**<br>நுழைகையில் 75 ஆண்டுகளுக்கு குறைந்த வயது^ |
| **பிரீமியம் செலுத்தும் காலவரை** | பாலிசி காலவரை போன்றதே | |
| **$$பிரீமியம் தொகை** | **குறைந்தபட்சம் :**<br>வருடாந்திரம் : ரூ.2,779<br>அரையாண்டு : ரூ.1,418<br>காலாண்டு : ரூ.723<br>மாதாந்திரம்^^ : ரூ.237 | **அதிகபட்சம் :** வரம்பு இல்லை<br>(குழு ஒப்புதல் வழங்கியுள்ள காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது) |

*^வயது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் இப்போது முடிந்து போன பிறந்தநாளின் படியாகும்.*

*^^மாதாந்திர வகைக்காக 3 மாதங்கள் வரை பிரீமியம் முன்பணமாக செலுத்த வேண்டும். புதுப்பிப்பு பிரீமியம் பணச் செலுத்தம் எலெக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (ECS) அல்லது நிலை கட்டளைகள் (வங்கிக் கணக்கிலிருந்து நேரடி டெபிட் மூலம் அல்லது கிரெடிட் கார்டு மூலம் செய்யப்படும் பணச் செலுத்தம்) மூலம் மட்டுமே செய்யப்பட வேண்டும். மாதாந்திர சம்பள சேமிப்பு திட்டத்திற்காக (SSS), 2 மாதங்கள் வரை பிரீமியம் முன்கூட்டி செலுத்தப்பட வேண்டும் மற்றும் புதுப்பிப்பு பிரீமியம் செலுத்தும் சம்பள பிடித்தத்தின் மூலம் மட்டும் அனுமதிக்கப்படும்.*

*$$மேலே காட்டப்பட்டுள்ள பிரீமியம் தொகை பொருந்தும் வரிகள் நீங்கலாக மற்றும் காப்புறுதி விண்ணப்ப கணிப்பு கூடுதலாகும். நிலவும் வரிச் சட்டங்களின்படி வரிகள் பொருந்தும்.*

**ரிபேட் அளிக்கத் தடை :**

**காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டபடி :**

(1) இந்தியாவில் உயிர் அல்லது சொத்து சம்பந்தமான ஒரு புதிய காப்பீடு அல்லது காப்பீட்டைப் புதுப்பித்தல் அல்லது தொடரச் செய்வதை ஊக்குவிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒருவருக்குக் கொடுக்கப்படும் கமிஷனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியை பாசிலி மீது கட்டப்படும் பிரீமியத்தில் ஒரு தள்ளுபடியாக அளிக்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் மற்றும் வெளியிடப்பட்டுள்ள பாலிசி அம்சங்கள் அல்லது காப்பீட்டாளரின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் தள்ளுபடிகள் தவிர பாலிசி எடுக்க, புதுப்பிக்க அல்லது தொடர ஊக்குவிக்கும் முறையில் எந்த தள்ளுபடியும் வழங்க அல்லது ஏற்றுக்கொள்ள அனுமதி இல்லை :

(2) இந்த பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றுவதில் எவரும் தவறு செய்திருப்பின் அபராதத்திற்கு உரியவர் ஆவார், அது பத்து லட்சம் ரூபாய்வரை இருக்கப்பெறலாம்.

Toll Free: **1800 103 4294** (Between 8.30 am & 9.30 pm) | SMS - **'Ebuy eS' to 56161** | Visit us at: **www.sbilife.co.in** | E-mail: **online.cell@sbilife.co.in**

Follow us on: /sbilifeinsurance | /sbilifeinsurance | /sbilife

**போலியான தொலைபேசி அழைப்புகள் மற்றும் கற்பனையான/மோசடியான வழங்கல்கள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்:**

காப்பீடு பாலிசிகள், போனஸ் அறிவிப்பு அல்லது பிரீமியங்கள் முதலீடு போன்ற நடவடிக்கைகளில் IRDAI ஈடுபடுவதில்லை. இது போன்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறும் பொதுமக்கள் காவல்துறையிடம் புகார் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திட்டங்களை வாங்க முடிவெடுக்கும் முன்னர் அபாய இழப்பு காரணிகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த அதிக விபரங்களை விற்பனை கையேட்டில் படித்துப் பார்த்த பிறகே முடிவு செய்ய வேண்டும். ரைடர்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், விலக்கல்கள் குறித்த கூடுதல் விபரங்களுக்கு, ரைடர் கையேட்டை தயவுசெய்து பார்க்கவும். மேலே பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவிற்குச் சொந்தமான வணிகச் சின்னம் உரிமம் பெற்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை விவரக்குறிப்பு வாடிக்கையாளரின் வசதிக்காக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எந்த வார்த்தை/அறிக்கையிலும் கவனக்குறை காரணமாக வேறுபாடு பொருந்தாமை இருப்பின் எக்காலத்தும் ஆங்கில கூற்று வழக்கத்தில் இருக்கும். எஸ்பிஐ லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், பதிவு மற்றும் கார்பொரேட் அலுவலகம்: நட்ராஜ், எம்.வி. ரோடு - வெஸ்டர்ன்ஸ் எக்ஸ்பிரஸ் சந்திப்பு, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400 069, **IRDAI பதிவு எண். 111**. CIN: L99999MH2000PLC129113. 1G.ver.02-06-20 SP TAM